**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**

**C.C.No.86/2022**

2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ம் நாள் வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி–1 பிரான்சிஸ் தனராஜ் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.ஜெ.லதா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரான்சிஸ் தனராஜ் | வயது | : |
| த.பெ/ க.பெ. | : | தொழில் | : |
| ஊர் | : | சமயம் | : |
| வட்டம் | : | சாதி | : |
| மாவட்டம் | : | | |

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் வடவீக்கத்தில் வசித்து வருகிறேன். வாகன உதிரி பாக கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரியை தெரியும். எனது ஊர்காரர். எனக்கும், ஆஜர் எதிரிக்கும் பணம் கொடுக்கல், வாங்கல் ரொம்ப நாட்களாக இருந்து வந்தது. ஆஜர் எதிரியிடம் ரூபாய் ஆறு லட்சம் வாங்கியிருந்தேன். அதில் ஐந்து லட்சம் ரூபாய் கொடுத்துவிட்டேன்,. ஒரு லட்சம் பாக்கி இருந்தது. வேறு கணக்கு வழக்கு இருந்ததால் அதை நிறுத்தி வைத்திருந்தேன். 20.08.2021ல் மதியம் 3.30 மணிக்கு நான் என் கடையில் இருந்தேன். வடவீக்கத்தில் உள்ள எனது வீட்டினுள் ஆஜர் எதிரி நுழைந்து எனது மனைவி கனிமொழியையும், எனது மகள் பிளாரன்ஸ் ரித்தி ஆகியோரையும் தேவடியா, குச்சிக்காரி என்று தகாத வார்த்தைகளால் திட்டி, உனது கணவர் பணம் தரவில்லை என்றால் இங்கேயே படுத்துக்கொள்வேன் என்று சொன்னார். அப்போது என் வீட்டின் முன்பக்க அறையில் தூங்கிக் கொண்டிருந்த என் அப்பா ஜாயிஸ் வந்து எதிரியை இதுமாதிரி எல்லாம் செய்யக்கூடாது என்று சொன்னார், அதற்கு என் அப்பாவை எதிரி தள்ளிவிட்டார். என் மனைவி என் அப்பாவை பிடித்துக் கொண்டார். இந்த விபரங்களை என் மனைவி போன் மூலம் எனக்கு தகவல் சொன்னார். நான் என் வீட்டிற்கு சென்று பார்த்தபோது எதிரி அங்கு இல்லை. நான் இது சம்மந்தமாக ஜெயங்கொண்டம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –**

நான் எதிரிக்கு கொடுக்க வேண்டிய பாக்கி ஒரு லட்சத்தை கொடுத்துவிட்டேனா என்றால் இல்லை. நான் சொல்ல சொல்ல என் நண்பர் ரமேஷ் அவருடைய கணிணி மூலம் தட்டச்சு செய்து கொடுத்தார். புகார் மனுவில் எதிரி தேவடியா, குச்சிக்காரி என்று திட்டியதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். எனது நிலத்தை நான் விற்பனை செய்தபோது எதிரி விலை நிர்ணயம் செய்து பேச்சுவார்த்தை நடத்தினாரா என்றால் இல்லை. நான் என் நிலத்தை வேறு ஒரு நபருக்கு விற்றபிறகும் எதிரிக்கு கொடுக்க வேண்டிய மீதி கடன் பணத்தை கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரி அவருக்கு சேர வேண்டிய பணத்தை கேட்டார் என்றாலும், அவருடைய பணத்தை ஏமாற்றுவதற்காக என் குடும்பத்துடன் சேர்ந்து, என் நிலத்தை அவர் வாங்கவில்லை என்பதால் திட்டமிட்டு அவர் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த மறுநாளே என்னையும், என் குடும்பத்தினரையும் போலீசார் விசாரித்தார்கள். 4, 5 முறை விசாரித்தார்கள். தொடர்ந்து 2, 3 நாட்கள் வந்து விசாரித்தார்கள். நான் பொய் புகார் கொடுத்ததால்தான் போலீசார் உடனடியாக வழக்கு பதிவு செய்யவில்லை என்றாலும், என் செல்வாக்கை பயன்படுத்தி வழக்கு பதிவு செய்ய வைத்தேன் என்றாலும் சரியல்ல. நான் எதிரி மீது பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல

/உண்மை நகல்/

ஒம்/.ஆர்.இராஜசேகரன், எல்,எல்,எம்.,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,

ஜெயங்கொண்டம்.